Source: *Tamil Murasu*, p3
Date: 13 July 2019

# அந்திமக் காலத்துக்கு திட்டமிடல் அவசியம்

## ஆய்வு மேற்கொண்ட கொள்கை ஆய்வுக் கழகம் பரிந்துரைகளை வழங்கியுள்ளது

மரணம், இறப்பு தொடர்பான விஷயங்களைக் கடைசி நிமிடம் வரை சிங்கப்பூரர்கள் தள்ளிப்போடுவதாகச் சொல்லப்படுகிறது. ஆனால், மூப்படையும் சமூகத்தைக் கொண்டுள்ள சிங்கப்பூரில் இந்தப் போக்கு மாற வேண்டும் என்றும் அந்திமக் காலத்துக்கு தயார்ப்படுத்தக்கூடிய தேசிய அளவிலான வலுவான திட்டம் தேவை எனவும் கொள்கை ஆய்வுக் கழகம் நேற்று வெளியிட்ட புதிய அறிக்கை பரிந்துரைக்கிறது.

"முதல் வீடு வாங்குவது முதல் பிள்ளைகளின் முதல் பள்ளிக்கூடம் வரை பெரும்பாலானவற்றை சிங்கப்பூரர்களான நாம் திட்டமிடுகிறோம்," என்று குறிப்பிட்ட கொள்கை ஆய்வுக் கழக ஆய்வு உதவியாளர் யுவோன் அறிவழகன், "வாழ்வில் மிகவும் முக்கியமான ஒன்றான அந்திமக் காலத்துக்கு ஒரு சிலரே திட்டமிடுகின்றனர்," என்றார். இந்த ஆய்வை மேற்கொண்ட குழுவில் இவர் அங்கம் வகித்துள்ளார்.

கழகம் வெளியிட்ட 97 பக்க அறிக்கை அந்திமக் காலப் பராமரிப்பு பற்றி எடுத்துரைத்தது. அந்திமக் காலப் பராமரிப்பில் உள்ள குறைபாடுகளை குறிப்பிட்டதுடன் அவற்றை நிறைவு செய்ய பரிந்துரைகளையும் அது உள்ளடக்கியுள்ளது.

செலவுகள், குடும்ப ஆதரவு, ஒருவரது இறுதி ஆசையைப் பற்றி தெரிவித்தல் போன்ற பல அம்சங்கள் அதில் இடம்பெற்றுள்ளன. இந்தப் பிரச்சினைகள் பற்றி கடந்த ஈராண்டுகளாக ஆய்வு செய்த, பல்வேறு துறைகளைச் சேர்ந்த நிபுணர்களின் கருத்துகளின் அடிப்படையில் இந்தப் பரிந்துரைகள் அமைந்துள்ளன.

"மிகவும் தாமதமாகும் வரை இது குறித்துப் பேச பலரும் தயங்குகின்றனர். ஆனால் கடைசி காலத்தில் நிதிப் பிரச்சினைகள் உட்பட பலவற்றைக் கருத்தில்கொள்ள வேண்டியிருக்கும். எனவே, அந்திமக் காலம் குறித்து முன்னதாகவே பேசுவது நல்லது," என்கிறார் அறிவழகன்.

எ லியன் ஃபௌண்டேஷன் 2014ஆம் ஆண்டு நடத்திய கருத்தாய்வின்படி, 77 விழுக்காட்டு மக்கள் வீட்டில் இறப்பதையே விரும்பினாலும் கடந்த ஆண்டு சிங்கப்பூர் டெமோகிராபிக் சஞ்சிகை வெளியிட்ட தகவலின் படி 24 விழுக்காட்டினர் மட்டுமே அதனை அடைந்ததாகவும் 69 விழுக்காட்டினர் மருத்துவமனைகளில் இறந்துபோனதாகவும் தெரியவந்துள்ளது.

மானியங்கள் அமைக்கப்பட்டுள்ள விதத்தைப் பார்த்தால், வீட்டில் இறப்பதைவிட மருத்துவமனையில் இறந்தால் செலவு குறைவாக இருக்கும்.

கொள்கை ஆய்வுக் கழகத்தின் மூத்த ஆய்வாளர் கிரிஸ்டஃபர் கீ, சிங்கப்பூரில் கடுமையான நோய்களுக்கு மருத்துவ வசதிகள் அதிகம் இருந்தாலும் நீண்டகாலப் பராமரிப்புக்கு குறைவாகவே முதலீடு செய்யப்பட்டுள்ளதுடன், நீண்டகாலப் பராமரிப்புக்கு மானியங்களும் குறைவாகவே உள்ளன என்றார். இந்த ஆய்வில் பங்கேற்றுள்ள அவர், வீடுகள், சமூக நிலையங்களில் பராமரிப்பு பெறுவோருக்கும் மானியங்கள் வழங்குவது பற்றி சிந்திக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அந்திமக் காலப் பராமரிப்பு பற்றி பேசுவதற்கு குடும்பத்தாரும் தயங்குவதை அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது.

அந்திமக் காலத்தில் முடிவு எடுக்க முடியாதபோது அவர்கள் சார்பில் முடிவெடுக்கும் அதிகாரத்தை சட்டபூர்வமாக ஒருவருக்கு வழங்குவது குறித்த விழிப்புணர்வையும் ஏற்படுத்த வேண்டுமென்கிறது அறிக்கை. இது தொடர்பான ஆவணங்களை ஒரே பிரிவு கையாள்வது செயல்பாடுகளை எளிதாக்கும் என்று குறிப்பிடும் அறிக்கை, தேசிய அளவில் பள்ளிகள், வேலையிடங்கள், சமய அமைப்புகள் அந்திமக் காலப் பராமரிப்பு குறித்து பேசுவதன் மூலம் அதனை வாழ்வின் ஓர் அங்கமாக்கலாம் என்கிறது.



டான் டோக் செங் மருத்துவமனையில் பல நோயாளிகள் அந்திமக் காலம் குறித்த உரையாடலை மருத்துவர்களிடம் மேற்கொள்கின்றனர். மற்ற சுகாதாரத் திட்டங்களுடன் ஒப்பிடுகையில் அந்திமக் காலப் பராமரிப்புச் சேவைகளுக்கான நிதித் திட்டங்களும் குறைவாகவே உள்ளன. பொதுவாக அந்திமக் காலப் பராமரிப்பு குடும்பத்தார், சமூகத்தால் வழங்கப்படுகிறது. தங்களது அன்புக்குரியவர்கள் மருத்துவச் செலவை ஏற்றுக்கொள்வதைத் தவிர்க்கும் பொருட்டு, சிகிச்சை வேண்டாமென பலர் மறுத்து விடுவதுண்டு.

**படம்: சாவ் பாவ்**

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.